பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 27 | ஞாயிற்றுக்கிழமை | 11.02.2024 | கதிர் 96

# ஜனாதிபதி, பொது தேர்தல்கள் அடுத்தடுத்து நிச்சயம் நடக்கும்

## இந்திய ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி உறுதி

**ஜனாதிபதி தேர்தலையும் பொதுத்தேர்தலையும் அடுத்தடுத்து நடத்தவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்மரசிங்க தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் பேர்த்நகரில் இந்திய ஊடகமான WIONக்கு வழங்கிய நேர்காணலில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.**

**உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைப் போலவே ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒத்திவைப்பதற்கான முயற்சியில் ஜனாதிபதி ஈடுபடுகின்றார் என்கிற குற்றச்சாட்டுக்களை எதிர்க் கட்சியினர் தெரிவித்து வரும் நிலையில் தேர்தல்கள் நடத்தப்படும்** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு இழுபறி குறித்து இன்று வவுனியாவில் கட்சிப் பிரமுகர்கள்கூடி ஆராயவுள்ளனர். முதலில் கட்சியின் மத்திய செயற்குழுவை இன்று கூட்டி ஆராய்வது என்றுதான் முடிவு செய்யப்பட்டது. ஆனால் சுமந்திரன் தரப்பினர்புதியசெயற்குழுவைத்தான் கூட்டமுடியும் என்கிற நிலைப்பாட்டில் இருந்ததை அடுத்து, இன்றைய கூட்டம் செயற்குழுக் கூட்டம் என்கிற நிலைப்பாட்டில் இருந்து மாற்றப்பட்டு சமரசக் கூட்டம் என்கிற போர்வைக்குள் சென்றுள்ளது.

வழக்கம் போல, நியாயம் நீதி நேர்மை என்பவற்றை ஒருபுறம் தூக்கி வைத்துவிட்டு நீயும் விட்டுக்கொடு நீயும் விட்டுக்கொடு என்று சுமந்திரன் தரப்பினரையும் மட்டக்களப்புத்தரப்பினரையும் ☞ 2

## நீர்கொழும்பில் நேற்றிரவு ஒருவர் சுட்டுக்கொலை

நீர்கொழும்பு - கல்கந்த சந்தியில் நேற்றிரவு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைச் சுட்டுக் கொன்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கொலைக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் குறித்து உடனடியாக எந்த விவரமும் தெரியவரவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பூர்வாங்க விசாரணைகளுக்குப் ☞ 2

## ரூ. 58 மில். பெறுமதியான நகைக் கடத்தல் முறியடிப்பு

### கட்டுநாயக்காவில் சுத்திகரிப்பு ஊழியர் கைது

58 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளை கடத்த முயன்ற பெண் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விமான நிலையத்தில் சுத்திகரிப்பு பணியில் ஈடுபடும்வெயாங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடையவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபர் விமான நிலைய புறப்படும் முனையத்தில் வைத்து கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

விமானநிலையத்தில் உள்ள கழிவறையில் வைத்துமற்றொருபெண்ணால் ஒரு பொதி சந்தேகநபரிடம்கையளிக்கப்பட்டதாகவும் குறித்த பொதியை விமான நிலையத்திற்கு ☞ 2

## ரணில் – ராஜபக்சக்களுக்கு தேர்தலைக் கண்டு அச்சம்

### குமார் குணரட்ணம் கடும் விமர்சனம்

ரணில்-ராஜபக்சக்கள் இடத்தில் திட்டங்கள் எதுவுமில்லை. அதனால் அவர்கள் தேர்தலைக் கண்டுஅஞ்சுகின்றார்கள் என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரதமசெயலாளர் குமார் குணரட்னம் தெரிவித் தார்.

பதுளையில் நேற்று "செய்யக்கூடாதது எது" என்றதொனிப்பொருளில் நடத்தியமக்கள்சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைநடத்தவதாகஅறிவித்தார்கள். பின்னர் பணமில்லை என்று கூறி அதனை ஒத்திவைத்துள்ளார்கள். இப்போது ஜனாதிபதித் தேர்தல் என்று கூறுகின்றார்கள். ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கும் பணமில்லை என்ற கூறி ☞ 2

## இமயமலைப் பிரகடனத்தின் அடுத்த கட்டம் தொடங்கியது

### தேசிய உரையாடலுக்கான பயிலரங்குகள் ஆரம்பம்

இமயமலைப் பிரகடனத்தின் அடிப்படையில் தேசிய உரையாடலுக்காகமாவட்டரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள பயிற்சிப்பட்டறைகளுக்கானபயிலரங்குகள் தொடங்கியுள்ளன.

இமயமலைப்பிரகடனத்தின் சிறப்பம்சங்கள் குறித்தஉரையாடல்களை ஊக்குவிக்கும்வகையில், 150 சர்வமத குருமார்கள் மற்றும்சிவில்சமூகஉறுப்பினர்களை ஒருங்கிணைப் பாளர்களாக பயிற்றுவிப்பதற்கான ஐந்து பயிலரங்குகள் திட்டமிடப்பட்டுள்ளன.

முதலாவது பயிலரங்கு குருநா ☞ 2

## கடும் நெருக்கடிக்கு மத்தியிலும் ரணில் நாடு நாடாகச் சுற்றுலா

### எதிர்க் கட்சித் தலைவர் சாடல்

நாடு பெரும் நெருக்கடிக்கு முகங் கொடுக்கையிலும் ரணில் நாடு நாடாகச்சுற்றுகிறார்என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய போர் வீரர் நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

நாடு பெரும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கைஹயில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நிகழ்ச்சி நிரலுக்குஏற்பநாடுகளுக்க சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகின்றார். அது அவருடைய இயல்பானபாணியாகவே உள்ளது.

இந்த நாடு நெருக்கடிகளிலிருந்துமீள்வதாக இருந்தால் நாடு பற்றி அர்ப்பணிப்புடன் சிந்திக்கின்றதலைவர்அவசியம். நாட்டுக்கு முதலீடுகளையும், ☞ 2

## மருந்து விற்பனை, கொள்வனவு நிறுவனங்கன் மீது விசாரணை

### சி.ஐ.டி. நடவடிக்கை

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து மருந்து விற்பனை மற்றும் கொள்வனவு நிறுவனங்களையும் விசாரிக்கும் பணியை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) மேற்கொண்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மையில் மருந்து கொள்வனவு செய்த நிறுவனங்கள் மற்றும் அதனுடைய தொடர்புடையவர்கள்தொடர்பில் விரிவானவிசாரணைகள் முன்னெடுக்கப்ப ☞ 2

## இயற்கை எரிவாயு விநியோகம் தற்காலிகமாக இந்தியாவிடம்

### யோசனையை ஆராய்கிறது கொழும்பு

தற்காலிக செயற்றிட்டமாக எட்டு மாதங்களுக்கு இந்திய அரசு இயற்கை எரிவாயுவை வழங்குவதற்கு யோசனை முன்வைத்துள்ளது. இது தொடர்பிலான கலந்துரையாடல் தற்போது இடம்பெறுகின்றது என்றுமின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரதெரிவித்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில்நேற்றுசெய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

இந்தியாவின் நாகப்பட்டி ☞ 2

## வெளிநாடுகளுக்கு செல்வதால் எமது கொள்கைகள் மாறிவிடா

### ஜேவிபி அறிவிப்பு

வெளிநாட்டுக்குச் சென்று அரச தலைவர்களைச்சந்திப்பதென்பது எமது கொள்கைகளை மாற்றிக்கொள்வதாக அமையாது. நாம் எமது அரசியல், பொருளதாரக் கொள்கைகளைமாற்றிக் கொள்ளவில்லை. நாம் அரச தலைவர்களுடன் உரையாடுகின்றோம். எமது கொள்கைகளைத் தெளிவுபடுத்துகின்றோம்.

இவ்வாறு தேசிய மக்கள்சக்தியின்தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ பயணத்தை நிறைவு செய்ததன்பின்னர் ☞ 8

உயிர் நீதிமன்றத்தால் குறிப்பிட்டபோதும்

## நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் 5 திருத்தங்கள் செய்யப்படவில்லை

### மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்தமுப்பதுக்கும் மேற்பட்ட விடயங்களில் ஐந்து விடயங்கள் உள்ளடக்கப்படாமையை சுட்டிக்காட்டி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுசபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு கடிதமொன்றைஅனுப்பி வைத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளர் நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனி யவின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப் பட்டுள்ள குறித்த கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி ரணில் வி;க்கிரமசிங்க, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், சட்டமா அதிபர் ஆகியோருக்கும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 13,16,19,20,27 ஆகிய ஐந்து பிரிவுகளில் உயர்நீதிமன்றம் பரிந்துரைத்தவிடயங்கள் முழுமையாகவும், பகுதியாகவும் ☞ 2

## நிகழ்நிலை காப்புச் சட்டம் சுதந்திரத்தைப் பறிக்காது

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் திட்டவட்டம்

நிகழ்நிலை காப்புச் சட்டம்மக்களின்சுதந்திரத்தைப்பறிக்காது. ஆனால் பணம்பெற்றுக்கொண்டு மற்றவர்கள் மீது சேறுபூசுபவர்கள்தான் இந்தச்சட்டத்தைக்கண்டு அஞ்சுகிறார்கள என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பானந்துறையில் பிரஜாபொலிஸ்உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம்நபர்ஒருவரைக் கைதுசெய்தோம். அவரிடத்தில் நான்கு இலட்சத்துக்கும் அதிகமான பணம்இருந்தது. அவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஒரு இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவருதற்கான முயற்சிகள்தான் இன்றைய கூட்டத்தில் அனேகமாக நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டுகின்றது. அதில் முக்கியமாக, செயலாளர் பதவியை சுமந்திரன் தரப்பைச் சேர்ந்தவரான, தற்போது தெரிவு செய்யப்பட்டிருப்பவரான குகதாஸன் ஒரு வருடமும் மட்டக்களப்பைச் சேர்ந்தவரான சிறீநேசன் ஒருவருடமும் வகிப்பது என்கிற ஒரு யோசனை ஆராயப்படவுள்ளது.

இந்த யோசனை தொடர்பில் கட்சித் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பவரான சிறீதரன் ஏற்கனவே மட்டக்களப்புத் தரப்பினருடன் பேசியிருக்கிறார். ஆனால், பிரச்சினை என்னவென்றால்இருதரப்பினருமே அந்த -முதலாவது பதவிக் காலத்தை தமக்குத் தருவதாக இருந்தால் இந்தத் திட்டம் குறித்துப் பரிசீலிக்கலாம் என்கிறார்கள். எனவே இன்றைய கூட்டமும் இந்தப் பிரச்சினைக்கு ஒருதீர்வைக் காணும் விதத்தில் அமையுமா என்பது கேள்விக்குறிதான்.

சுமந்திரன் தரப்பினரைப் பொறுத்தவரையில் திருகோணமலைப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயலாளர் குகதாஸன்தான். அதனால் அவரே முதலாவது பதவிக் காலத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்கிறார்கள். ஆனால், முதலாவது பதவிக் காலத்தை குகதாஸனிடம் கொடுத்துவிட்டால்பின்னர்அதனை அடுத்த வருடம் திரும்பப் பெறுவது என்பது துர்பலமே என்று கருதும் மட்டக்களப்புஅணியினர்முதலாவது பதவிக் காலத்தை எப்படியும் தாமே பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதில் குறியாக இருக்கின்றனர். எனவே இன்றும் சமரசம் கடினமானதாகத்தான் இருக்கும்.

இன்றைய கூட்டத்தில் சுமந்திரனோ அவரது தரப்பினரோ கலந்துகொள்வார்களாக என்பதை உறுதிசெய்ய முடியவில்லை. தேர்தல்கள் நடக்கலாம் என்கிற நிலையில், பிரச்சினைகள் வளர்ந்து செல்வது கட்சியின் அரசியல் எதிர்காலத்திற்குப் பாதகமாக அமையும்என்பதுகடும்அழுத்தமாக இருக்கும்என்பதால்மிகவிரைவில் இந்தப் பிரச்சினைக்கு ஒருதீர்வைக் காணவேண்டும்என்கிறகட்டாயமும் இருதரப்பினருக்குமேஇருக்கின்றது. பிரச்சினை தீர்க்கப்பட்டால்தான் புதிய தலைவரும் நிர்வாகமும் விரைவில்பதவியேற்கமுடியும்.அது, மட்டக்களப்புஅணியினர்எவ்வளவு தூரத்திற்கு விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதைப்பொறுத்துத்தான் அமையவுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஒருங்கியல்அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களை, அதில் அனேகமானவற்றை அல்லது தேவையானவற்றை வழங்கத் தயாராகவுள்ளோம் என ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்

இந்திய ஊடகமொன்றிற்கான பேட்டியில் அவர் இதனை தெரிவித்தார்.

அடுத்த வருடம் மாகாணசபை தேர்தல்களை நடத்துவோம் நாடாளுமன்ற அமர்வுகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றியவேளை நான் தெரிவித்தது போல நாங்கள் ஒவ்வொரு மாகாணசபைக்கும் அதன் சொந்த பொருளாதாரத்தை வழங்க விரும்புகின்றோம்.

அதன்காரணமாக இந்தியா போன்று ஒவ்வொரு மாகாணமும் ஏனைய மாகாணத்தின் பொருளாதாரத்துடன் போட்டியிடும்.இதனால் நன்மையேற்படும் பொருளாதாரம் போட்டிதன்மை மிகுந்ததாக காணப்படும்.

மேலும் இந்த மாகாணங்கள் தங்களின் பொருளாதார சமூக அபிவிருத்தியை தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் கையாளவேண்டும்.

இந்த அடிப்படையில் ஒருங்கியல் அதிகாரப்பட்டியலில் உள்ள அதிகாரங்களை அதில் அனேகமானவற்றை அல்லது தேவையானவற்றை வழங்க தயாராகவுள்ளோம்.

சில சிறுபான்மை குழுக்கள் செனெட்டிற்கான வேண்டுகோளை விடுத்துள்ளன என்னை பொறுத்தவரைக்கும் எங்களை பொறுத்தவரைக்கும் நாங்கள் அதனைஎதிர்க்கமாட்டோம்.ஆனால் இதனை வெறுமனே அரசாங்கம் மாத்திரம் ஏற்றுக்கொள்ள முடியாது அனைத்துகட்சிகளும்ஏற்றுக்கொள்ள வேண்டும்.நாடாளுமன்றத்தில் பல கட்சிகள் உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்

## கடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி மூலங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய தலைவர் ஒருவர் தேவையாக உள்ளார்.

அதனைவிடுத்து வெறுமனே மேடைப்பேச்சுக்களை மேற்கொள்வதால் எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. அதுமட்டுமன்றி அவர்கள் தமது அரசியல் அரங்கிற்கு பொதுமக்கள் செறிவாக இருக்கின்றார்கள் என்றும் காண்பிக்கலாம். ஆனால் அப்பாவி மக்களின் நெருக்கடியான நிலைமைகள்அந்ததலைவர்களுக்கு தெரிவதில்லை என்றார்.

## நிகழ்நிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளுக்கு உட்படுத்தியபோது, எமக்கும் சிலருக்கும் சேறுபூசும் செயற்பாடுகளை சமூக ஊடகத்தின் ஊடாக மேற்கொள்வது உறுதி செய்யப்பட்டது. இதற்காக அவருக்கு அரசியல்வாதிகள் சிலர் பணம் வழங்குகின்றார்கள். அதுவும் டொலர்களில் பணம் வழங்குகின்றார்கள். அவ்வாறுஅவர் பெற்றுக்கொண்ட டொலர்களை மாற்றுவதற்காக காரில் சென்றபோது தான் நாம் அவரைக் கைது செய்தோம்.

இதுபோன்று பலர் சமூக ஊடகங்களை தவறாகப் பயன்படுத்துகின்றார்கள். அதனாலேயேநாம்நிகழ்நிலைகாப்புச் சட்டத்தினை அமுலாக்கினோம். அந்தச் சட்டத்தினால் யாருக்கும் எந்தப்பிரச்சினையும் இல்லை. ஆனால் மேற்படிநபர் போன்று செயற்படுபவர்களுக்குதான் பிரச்சினைகள் உள்ளன. ஆகவே தான் அந்தச் சட்டத்துக்கு எதிராக குறிப்பிட்ட தரப்பினர் எதிர்ப்புக்களை வெளியிடுகின்றார்கள்.

பிறிதொரு தரப்பினர் உள்ளனர். அவர்கள் வெளிநாடுகளுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தகவல்களை வழங்குபவர்கள். அவர்களும் குழப்படைந்துள்ளமையால் சர்வதேச சமூகத்துக்கு தவறான தகவல்களை வழங்கியுள்ளார்கள். ஆனால், பொதுமக்கள் இந்தச் சட்டத்தினால் எந்தவிதமான குழப்பங்களையும் அடையவில்லை. அவர்கள் முறையாக செயற்படுகின்றார்கள்.

அவர்கள் அச்சமடையவில்லை. ஏனென்றால் இந்தச் சட்டத்தில் எந்தவிதமான சுதந்திரங்களைப் பறிக்கும் ஏற்பாடுகளும் இல்லை. அவ்வாறு காணப்படுகின்ற ஒரு விடயத்தினையாவது வெளிப்படுத்துமாறுநான்பகிரங்கமாக கோருகின்றேன் என்றார்.

## ரூ. 58 மில். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேஉள்ளநபரிடம்கொடுத்தால் 60 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்றுகூறப்பட்டதாகவும்அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காககட்டுநாயக்கவிமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## மருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஹியுமன் இம்யூனோ குளோபின் ஊழல்கள் தொடர்பான விசாரணைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மேற்படி கூட்டத்தில் ஆராயப்பட்டதோடு,பொலிஸார்சமீபத்தில் சட்டமா அதிபருடன் தங்களது விசாரணையின்போதுமுன்னெடுக்கப்பட்ட சட்ட ரீதியான விடயங்கள் சம்பந்தமாகவும் பகிரப்பட்டது.

ஹியுமன்இம்யூனோகுளோபின் கொள்வனவின் போது நடைபெற்ற முறையகேடானகொடுக்கல்வாங்கல் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர்கெஹலியரம்புக்வெல்ல, முன்னாள் அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் பலர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தாது இருப்பார்களா என்ற கேள்வி இருக்கின்றது.

எம்மிடம், நிதியில்லை என்று கூறுவதால்பயனில்லை. ஜனாதிபதி தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டும். இன்னும் ஏழு அல்லது எட்டுமாதங்களில்நாடுமகிழ்ச்சியாக இருக்கும்.

ஆனால், உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒத்திவைத்தவர்கள் மீண்டும் தேர்தல்களை நடத்துவார்கள் என்று நம்பிக்கை கொள்வது பொருத்தமற்றது. ரணில் ராஜபக்ச இடத்தில் எந்தத் திட்டங்களும் இல்லை. அதனால் அவர் தேர்தலுக்கு அச்சப்படுகின்றார்.

அதேநேரம், அவர் தற்போது எதிர்க்கட்சிகளின் திட்டங்களையும் குழப்புகின்றார். அது தொடர்பிலான புரிதல் எதிர்க்கட்சிகளுக்கும் இல்லை. அவர்கள் தேர்தலை நடத்தச் செய்வோம் என்று மார்தட்டினாலும் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

## நீர்கொழும்பில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் உடல்கூறாய்வுக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## இங்கை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னத்துக்கும்,திருகோணமலைக்கும், திருகோணமலையிலியிலிருந்து கொழும்புக்கும் இணைப்பை ஏற்படுத்தும்வகையில்எண்ணெய் குழாய்கள்நிர்மாணிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் மதிப்பீட்டு நடவடிக்கைகளும், கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போதுஅமைச்சினால்அதற்கான குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஏண்ணெய்குழாய் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றபோது, திருமலையில் உள்ள எண்ணெய் குதங்களையும் புனரமைத்து பயன்படுத்தமுடியும். கப்பலுக்கான எரிபொருளை வழங்குவது மாத்திரமன்றி எரிபொருள் சேகரிப்பு கேந்திர நிலையமாக அதனை வைத்திருப்பதற்கும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

எண்ணெய் குதங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் 61 தாங்கிகளை இருதரப்பு ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்து முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பான அபிப்பிராயத்துக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

தற்காலிக செயற்றிட்டமாக எட்டு மாதங்களுக்குஇந்தியஅரசுஇயற்கை எரிவாயுவை வழங்குவதற்கு யோசனை முன்வைத்துள்ளது. இது தொடர்பிலான கலந்துரையாடல் தற்போது இடம்பெறுகின்றது. இயற்கை வாயு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய இரண்டு விடயங்களையும் தனியாருக்கு வழங்குவது தொடர்பில் நாம் கலந்துரையாடி வருகின்றோம்.

எரிபொருள் மற்றும் எரிவாயு தொடர்பில்சட்டம்இயற்றப்பட்டுள்ளது. தகுதியான நிறுவனம் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சட்டமூலமும் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டத்தினை நான் நிறுத்தப்போவதில்லை என்று விமர்சனம் செய்பவர்களுக்கு சவால் விடுகின்றேன்.

சட்டமூலத்தில் சில பிழைகள் காணப்படுகின்றன. அவற்றைத்திருத்தம் செய்து மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். மக்கள் விடுதலை முன்னணியிலுடன் தொடர்புடையவர்கள்இந்தத்திட்டத்தைஅதானிக்கு வழங்கப்போவதாககூறியுள்ளார்கள். இந்தியாவுக்குவழங்கப்போவதாகக் கூறுகின்றார்கள்.

அதானிநிறுவனத்துடன்இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதில் விலைகள் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. இந்தியாவில் ஒருவிலை,இலங்கையில்பிறிதொரு விலை என்று கூறுகின்றார்கள்.

தற்போது 34 முதல் 35 ரூபா என்று இந்தியத் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அதனை மேலும் குறைக்க முடியுமா என்று நாம் முயற்சிக்கின்றோம் என்றார்.

## நிகழ்நிலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவாங்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் சான்றுரைக்கப்பட்டுள்ள நிலையில் உயர்நீதிமன்றத்தின் உள்ளடக்கங்கள் இடம்பெறாது தவறுகள் இழைக்கப்பட்டதையிட்டு ஆழ்ந்த கவலைகளையும், கரிசனைகளையும் கொள்வதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தின்விடயங்கள் உள்ளீர்க்கப்படாது சட்டம் நிறைவேற்றப்பட்டமையானது பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு காணப்படும்வாய்ப்புக்கள்தொடர்பில் கவலைக்குரிய நிலைமைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் உள்ளடக்கப்படாது நிறைவேற்றப்படுவதாக இருந்தால் பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையுடனேயே அதாவது மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடனேயே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டியது அவசியமாகின்றது. ஆனால் அந்த விடயங்களை உள்ளடக்கிய சட்டமூலம் சதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளமையை சாதாரணமாக கொள்ள முடியாது.

ஆகவே, உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளைக் உள்ளடக்காது காணப்படுமாயின் தற்போதைய சட்டம் தனது வடிவதத்தில் உயர்நீதிமன்றத்துடன் இணங்குகின்றமைக்கான தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றதா என்பது தொடர்பில் தீவிரமான கவலைகள் ஏற்படுத்தப்படலாம். ஆகவே பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் அச்சட்டம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## இமயமலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலில்தொடங்கியுள்ளதோடுஇதனையடுத்து கண்டி, மட்டக்களப்பு, மாத்தறை மற்றும் வவுனியாவில் பயிலரங்குகள் இடம்பெறவுள்ளது. அதன் அருகில் உள்ள மாவட்டங்களின் பிரதிநிதிகளும் இவற்றில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் பயிலரங்குகளின் பங்கேற்பாளர்கள் எதிர்வரும் மாதங்களில் நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும்உரையாடல்களை எளிதாக்குவதற்கான முக்கிய வளவாளர்களாக இருப்பார்கள்.

அந்த வகையில் குருநாகலில் நடைபெற்ற பயிலரங்கில் புத்தளம் மற்றும் அனுராதபுர

தொடர்ச்சி 8ம் பக்கம்....



# மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு காணி உறுதிபத்திரம ஏப்ரல் வழங்கல்

## அமைச்சர் ஜீவன் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

இந்திய அரசின் நிதி உதவியுடன் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டுத் திட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பி க்கப்படவுள்ளது. முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகள் நிர்மாணிக்கப்படும். - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உறுதிபத்திரம் வழங்கும் சௌமியபூமி திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாகவும் நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் நிலவும் பிரச்சினைகளுக்கு நிலையான - நிரந்தரமான - தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதே எமது இலக்காக இருக்கின்றது. அந்த நோக்குடனேயே நான் அமைச்சு பதவியை ஏற்றேன். இதற்காக குழுக்களும் நியமிக்கப்பட்டன. தீர்வு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன . அவற்றை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2014 இல் இந்திய அரசால் வழங்கப்பட்ட 4 ஆயிரம் வீட்டு திட்டத்தை முழுமையாக முடிப்பதற்கு 10 வருடங்கள் எடுத்துள்ளன. இக்காலப்பகுதியில் பெருந்தோட்டப்பகுதிகளில் சனத்தொகைகூட 4 ஆயிரமாக அதிகரித்திருக்கும். இது தொடர்பில் நான் எவரையும் குறைகூறவில்லை. யதார்த்தத்தையே கூற விளைகின்றேன். அதேபோல 2017 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட 10 ஆயிரம் வீட்டு திட்டமும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் ஆறு வருடங்கள்வரை தாமதமானது.

எனினும், எதிர்வரும் 19 ஆம் திகதி வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான தகவலை அறியத்தருகின்றேன். முதற்கட்டமாக ஆயிரத்து 300 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்படும். ஒகஸ்ட் மாதத்துக்குள் இத்திட்டத்தை நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றோம். 1,300 வீடுகளுக்கும் ஒரே நாளில் அடிக்கல் நாட்டப்படும். தனித்தனியே அடிக்கல் நாட்டு விழாக்களை நடத்தி மக்களை பணத்தை வீணடிக்க விரும்பவில்லை.

அதேபோல 2 மற்றும் 3 ஆம் கட்டங்களையும் அடுத்தடுத்த மாதங்களில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.

மலையகப் பெருந்தோட்டப்பகுதிகளில் 2 லட்சத்து 51 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. சுமார் 66 ஆயிரம் வீடுகளே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு வீட்டுப் பிரச்சினை உள்ளன. இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனில் காணி உரிமை வழங்கப்பட வேண்டும். மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்க நாட்டு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என அண்மைய ஆய்வுகள் - கருத்து கணிப்புகள் தெரிவித்துள்ளன.

மலையகப் பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டுக்காக உழைத்துள்ளனர். 1964 இல் எமது மக்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். எனவே, காணி உரிமையை நாம் பிச்சையாகக் கேட்கவில்லை. அது எமக்கு கிடைக்க வேண்டிய உரிமையாகும். எமது மக்கள் மானத்துடனும், மரியாதையுடனும் வாழவே விரும்புகின்றனர்.

காணி உரிமை சம்பந்தமாக பிரதமர் செயலகத்தில் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சந்திப்பொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அதிகாரிகள், பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவதை எதிர்க்கின்றோம் என பெருந்தோட்ட நிறுவனங்கள் குறிப்பிட்டன. காணி உரிமை வழங்கினால் தோட்டத்தில் வேலை செய்ய ஆள்கள் இருக்கமாட்டார்கள் எனவும் கூறின. இப்படியான தரப்புகளை வைத்துக்கொண்டு நாட்டை எப்படி முன்னேற்றுவது? பெருந்தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களைக் கௌரவமாக வழிநடத்தினால் அத்தொழில்துறை பாதுகாக்கப்படும். ஆனால் மக்களை மக்களாக மதிக்காமல் கம்பனிகள் செயற்படுவதால்தான் தொழிலாளர்கள் வெளியேறுகின்றனர். இதை நாம் சுட்டிக்காட்டினோம்.

பெருந்தோட்டத்துறை என்பது கீழ்த்தரமான தொழில் இல்லை. ஆனால் அதற்குரிய மரியாதையும், அங்கீகாரமும் வழங்கப்படாமல் இருப்பதே பிரச்சினையாகும்.

காணி உரிமை வழங்கினால் அதனை விற்பனை செய்துவிடுவார்கள் எனவும் பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர். விற்கின்றார்களோ இல்லையோ எமது மக்களுக்கு சேர வேண்டிய காணி உரிமை கிடைக்கப்பெற்றாக வேண்டும். அதேபோல காணி உரிமை பத்திரத்தை



பெருந்தோட்ட கம்பனிகளிடம் கொடுங்கள் எனவும் கூறினர். இது வேடிக்கையான விடயமாகும்.

பெருந்தோட்டப்பகுதிகளில் 40 ஆயிரம் ஹெக்டேயர் தரிசு நிலங்களாக உள்ளன. எமது மக்களுக்கு காணி உரிமை கிடைப்பதற்கு இதில் வெறும் 10 வீதமே போதும். மாறாக நாம் தேயிலைகளை பிடுங்கச்சொல்லவில்லை.

கலந்துரையாடல் நல்லபடியாக முடிந்தது, ஏப்ரல் மே மாதத்தில் காணி உரிமையை வழங்குவதற்கான சௌமியபூமி வேலைத்திட்டத்தை ஆரம்பிப்போம். தோட்டத்தில் வேலை செய்தால் மட்டுமல் அல்ல, தோட்டத்தில் பிறந்திருந்தாலே வீடு. இது விடயத்தில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.-என்றார். (05)

# பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்குவதில் தாமதம்

## வவுனியாவில் மக்கள் அந்தரிப்பு

வவுனியா பிரதேச செயலகத்தில் பிறப்பு - இறப்பு சான்றிதழ்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையால் அவற்றைப் பெற்றுக்கொள்ளச் சென்ற பொதுமக்கள் அந்தரிப்பிற்குள்ளாகினர்.

வவுனியா பிரதேசசெயலகத்தில் அமைந்துள்ள மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு பிறப்பு - இறப்பு மற்றும் திருமணச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக வெள்ளிக்கிழமை பொதுமக்கள் சென்றிருந்தனர்.

இந்நிலையில் காலை 9 மணிக்கு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் மாலை 3 மணிவரை பொதுமக்கள் காக்கவைக்கப்பட்ட போதிலும் பலருக்கு சான்றிதழ்கள் கிடைக்கப்பெறவில்லை. இதனால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அவசரத்தேவை நிமித்தம் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்திருந்தோம் எனினும் ஒருநாள் முழுவதும் நின்று கூட அதனை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று அவர்கள்

கவலை தெரிவித்தனர். தாமதம் காரணமாக கடமையில் இருந்த அலுவலர்கள் மீதும் தமது ஆத்திரத்தைச் செலுத்தினர்.

அத்துடன், வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டவர்களிற்கான விண்ணப்பங்கள் வெள்ளிக்கிழமை குறித்த அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றிருந்தனர்.

இதேவேளை குறித்த அலுவலகத்தில் அதிகமான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதால் தொடர்ச்சியாக இந்தநிலமை ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் தேவைக்கேற்ற ஊழியர்களை நியமித்து வினைத்திறனான புதிய முறைமை ஒன்றை உருவாக்கி அதனை சீர்செய்ய முடியும் என பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. (05-100)

# கிழக்கு மாகாண ஆசிரிய இடமாற்றப் பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் பதற்றமின்றி நம்பிக்கையுடன் இருக்கவும்

## நாடாளுமன்ற உரையில் ஹரீஸ் எம்.பி. நம்பிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள ஆசிரிய இடமாற்ற விடயம் தொடர்பில் மீண்டும் இன்றும் கூட ஜனாதிபதி செயலாளரை சந்தித்து கலந்துரையாடி கிழக்கு ஆளுநருடன் பேசி ஓர் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் யாரும் மட்டக்களப்பு மாவட்டம் உள்ளடங்கலாக எந்த மாவட்டத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட மாட்டாது என்ற உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. இடமாற்ற பட்டியலில் உள்ள ஆசிரியர்கள் எவ்வித பதட்டமுமில்லாது இது ஜனாதிபதி செயலாளருக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி என்ற அடிப்படையில் நம்பிக்கையுடன் இருக்க முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் உரைநிகழ்த்திய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -.

கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றம் நடைபெறத் தேவையான முஸ்தீபுகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதில் குறிப்பாக 400இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்ட போது கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க போன்றவர்களிடம் நான் மாணவர்களின் கல்வி நலன் கருதி பேச்சு நடத்தி ஈற்றில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் இந்த இடமாற்றம் இரத்து செய்யப்படும் என்ற இணக்கப்பாட்டுக்கு வந்திருந்ததுடன் உறுதிமொழியையும் சில தினங்களுக்கு முன்னர் வழங்கியிருந்தார்.



ஆசிரிய தொழிற்சங்கங்கள் எங்களை சந்தித்து பேசியபோது கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் 2016 ஆம் ஆண்டின் ஆசிரியர் வெற்றிட நியமத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த இடமாற்ற பட்டியலை தயாரித்துள்ளதாகத் தெரிவித்தனர்.

2021 ஆம் ஆண்டின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் பார்க்கும்போது அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இவைகள் இப்படி இருக்கத்தக்கதாக எதை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆசிரியர் இடமாற்றங்கள் மட்டக்களப்பு மற்றும் ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுகிறது என்றும் தெரிவித்தார். (05)

# விலைகள் காட்சிப்படுத்தப்படாத வெதுப்பகங்கள் மீது சோதனை

(கே எ ஹமீட்)

நிர்ணயிக்கப்பட்ட எடை மற்றும் விலையை காட்சிப்படுத்தாத சுமார் 232 வெதுப்பகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. குறித்த வெதுப்பகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களுக்கு எதிராக வழக்கு தொடர உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாண் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர், பெப்ரவரி 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்புக்களில் வெதுப்பகங்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நுகர்வோர் விவகார அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

நுகர்வோர்கள் தங்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அவசர தொலைபேசி இலக்கமான 1977 இற்குத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (05)

# பலளுவெள கிராம வரலாற்றில் முதன் முறையாக பொறியியலுக்கு தெரிவான மாணவன் கௌரவிப்பு

*(அஸ்ஹர் இப்றாஹிம்)*

*அநுராதபுர மாவட்டத்திலுள்ள பலளுவெள கிராமத்தில் முதன் முதலாக பொறியியல் பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் மற்றும் கலைப்பீடத்திற்கு பலளுவெள முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாணவிகளையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ரொலெக்ஸ் விளையாட்டுக்கழக தலைவர் றில்மி பளீல் தலைமையில் ரொலெக்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.*

*ரொலெக்ஸ் விளையாட்டுக்கழகமும் குட் பிரண்ட்ஸ் நண்பர்கள் குழுவும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த மேற்படி நிகழ்வில் பலளுவெள பள்ளிவாசல் பரிபாலன சபைத்தலைவர் என்.ஏ.எம்.றமீஸ், திக்கந்தியாவ பள்ளிவாசல் தலைவர் எம்.சாதிக், கெக்கிராவ கிறிக்கட் கவுன்ஸில் செயலாளர் ஏ.எம்.டீ.பாயிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நிறைவேற்று அதிகார ஒழிப்பு முயற்சிகள் இன்று சாத்தியமா?

நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமையை ஒழிப்பது தொடர்பாக ஆளும் தரப்பினருக்கும் பொது அமைப்புக்களுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றனஎன்றுசெய்திகள்வெளியாகி வருகின்றன.

கடந்த பல வருடங்களாக நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமையை ஒழிக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்தவர்தான் ரணில் விக்கிரமசிங்க. மைத்திரி – ரணில் ஆட்சிக் காலமான 2015 –முதல் 2019 வரையான காலப் பகுதியில் அதற்கான முன் முயற்சியாக அரசுத் தலைவரின் அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்துக்கு வழங்கும் சட்டத் திருத்தங்களும்கூடக் கொண்டுவரப்பட்டன. எனினும் 2022இல் அரசுத் தலைவராகப் பதவியேற்றது முதல் ரணில் விக்கிரமசிங்க அது குறித்து வாயே திறந்ததில்லை.

இப்போதுஅரசுத்தலைவர்தேர்தல்இந்தஆண்டின் பிற்பகுதியில் நடத்தப்படவேண்டியிருக்கும் சூழலில் நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது தொடர்பில் ஆராயத் தொடங்கியிருக்கிறார் என்பது கவனத்துக்குரியது. அரசுத் தலைவருக்கும் பொது அமைப்புக்களுக்கும் இடையே இதுவரை நடந்த கலந்துரையாடல்களில், நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமையை ஒழிப்பதற்கு எல்லாக் கட்சிகளுமே ஆதரவு வழங்கும் என்று பேசப்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் ஏனைய கட்சிகள் அனைத்தும் அதற்கு வலியுறுத்தியிருந்தன என்பதால் இப்போது அதனை எந்தக் கட்சியும் எதிர்க்க மாட்டா என்றும், எனவே நாடாளுமன்றத்தில் –மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் அதனை நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என்றும் இந்தக் கலந்துரையாடல்களில் பேசப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர் அதன் மீது பொதுக் கருத்துக்கணிப்பை நடத்த முடியும் என்றும் ஆளும் தரப்பினர் கருதுகின்றனர்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் அது சாத்தியமானதுதான் என்று சொல்லிவிடமுடியாது. நிறைவேற்று அரசுத் தலைவர் பதவியிலிருந்து வெளியேறப்போகும் ரணில் விக்கிரமசிங்க, அதுவும் அடுத்த அரசுத் தலைவராக அவர் வருவதற்கு வாய்ப்பே இல்லை என்கிற நிலையில் அந்த முறைமையே ஒழித்து நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்த முயற்சிப்பது என்பது, இருக்கும்வரை அரசுத் தலைவராக இருந்துவிட்டுப் பின்னர் நாடாளுமன்றத்திலும் தலைமைப் பொறுப்பை (பிரதமர்) எடுத்து அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கான அவரது முயற்சியாகவே எதிர்க் கட்சிகளால் பார்க்கப்படும். எனவே அவை இந்தத் திட்டத்திற்கு முழு ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமை மாற்றப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. சில சிறிய கட்சிகளுக்கு இது விடயத்தில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் மற்றைய கட்சிகளுக்கு அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேநேரம் ரணில் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான காய் நகர்த்தலாக இந்த விடயத்தைக் கையில் எடுப்பாராக இருந்தால் எதிர்க் கட்சிகள் அதனை ஆதரிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

அதிலும் அடுத்த அரசுத் தலைவராகும் கனவில் இருக்கும் சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் இன்றைய அரசியல் சூழலில் ரணிலின் திட்டத்தை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

# விஜய் சாதிப்பாரா?





அடிப்படையான அரசியல் சித்தாந்தம் சார்ந்த அல்லது கட்சி ரீதியான அமைப்பாக தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒரு நிர்வாக ரீதியான முறையை அவர் இதுவரை ஏற்படுத்திக் கொண்டிருக்கவில்லை. தனிப்பட்ட முறையில் ரசிகர் மன்றங்களை தமிழகம் முழுதும் நீக்க மறக் கொண்டிருக்கிறார் என்பதுதான் அவருக்கு பலம். உண்மையில் மிகமிக துல்லியமானத் திட்டமிடல், தெளிவான வியூகம், கண்ணியமான வார்த்தை பிரயோக அறிக்கை.

முதலமைச்சர் ஆகக்கூடிய சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் தவறவிட்ட ரஜினிகாந்த், ரஜினிகாந்த் அளவுக்கு செல்வாக்கு இல்லாத போதும் போதிய திட்டமிடல் இல்லாமல் அரசியலுக்குள் வந்து வீழ்ந்து போன விஜயகாந்த் ஆகிய இருவரின் வாழ்க்கையில் இருந்தும் சரியான பாடங்களை விஜய் கற்றுக் கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தனது ரசிகர்களை முழுமையான அரசியல்மயப்படுத்த வேண்டும் என்பதற்காக இரண்டு ஆண்டுகள் முன்னதாக கட்சியை அறிவித்தது மிகச் சரியான முடிவு. எடுத்த எடுப்பிலேயே கட்சியின் பெயரில் 'க்' சேர்க்காததை எதிர்மறை கவனயர்ப்பாகப் பயன்படுத்தி இருக்கிறார்களோ என்று சந்தேகம் வருகிறது. அதுபோக 'தமிழக வெற்றி கழகம்' என்பதை டிவிகே என்று சுருக்கமாகப் பார்த்தோமானால் 'தமிழக விஜய் கழகம்' என்றும் உள்ளடக்கமாக கொண்டிருக்கலாமோ என்றும் தோன்றுகிறது.

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான முடிவு, சாதாரண மக்கள் மத்தியில் விஜய் மீது ஒரு ஈர்ப்பு கொண்டுவர வைக்கும் முடிவு தனது மார்க்கெட் உச்சத்தில் இருக்கும் நிலையில், ஒரு படத்திற்கு 150 கோடி ரூபாய் கொடுக்கத் தயாரிப்பாளர்கள் காத்திருக்கும் நிலையில், ஆண்டுக்கு இரண்டு படங்கள் என அடுத்த 10 ஆண்டுகளில் 20 படங்களில் நடித்து 3,000 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட வாய்ப்பு இருந்தும் அதனை விட்டுவிட்டு 'ஒப்புக்கொண்ட படங்களை முடித்துவிட்டு நடிப்பதை நிறுத்திவிடுகிறேன்' என்று சொன்னது மிகப்பெரிய ஆச்சரியம். விஜய் விடுத்த அறிக்கையின் 'மாஸ்டர் ஸ்ட்ரோக்' அதுதான்.

ரஜினி 'தமிழ், தமிழ்நாட்டுக்கு முன்னுரிமை, அதற்கடுத்து இந்திய தேசியம், தேசிய ஒருமைப்பாடு' இவைதான் தமிழகத்தின் பாதையாக இருக்கும் என்பதை மிகச்சரியாகப் பிடித்துள்ளார் விஜய். ஊழலற்ற, வாரிசு முறையற்ற, நேர்மையான மகக்கள் நல ஜனநாக அரசியல், தமிழக உரிமைகள், ஈழத்தமிழர் சிக்கல் என இன்றைய சூழலில் பின நவீனத்துவ - இருத்தல் வாத போக்கின் வல்லமையோடு விஜய் தன் அரசியல் பயணத்தைத் தொடங்குவாரா?

அவர்தனது செயல்திட்டம் என்ன என்பதைச் சொல்ல வேண்டும். 50 வயதை எட்டிய அவருக்கு, அதுதான் வெற்றிக்கான பாதையும் கூட.

பெரும்பாலான மக்கள் வாக்குக்கப் பணம் வாங்குவது தங்களது உரிமை என்று நம்பத்தொடங்கி சில ஆண்டு ஆகிறது. அரசியல் கட்சித் தொண்டர்களும் தேத்தல் வேலை செய்வதற்கு தினசரி ஊதியமும் இதர செலவுகளுக்குப் பணமும் எதர்பார்க்கின்ற காலம் இது. டீ மட்டும் குடித்து விட்டு நாள் முழுவதும் கட்சிக் கொடிகளைக் கட்டி, போஸ்டர்களை ஒட்டிய தொண்டர்கள் இப்போது கிடையாது. எல்லாவற்றுக்கும் பணம் தேவை. ஜனநாயக அரசியல் மாறி பணநாயக அரசியலாகிவிட்டது.

எம்ஜிஆர் தனிக்கட்சி தொடங்கிய பின்னரும், தான் ஆட்சியை பிடிக்கின்ற வரை ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து நடித்துக்கொண்டே இருந்தார். அதன் மூலம் மக்களுடன் தொடர்பில் இருந்தார். விஜய், படங்களில் நடிப்பதை நிறுத்திவிடப் போவதாக அறிவித்திருக்கிறார்.

அதேநேரம் மீடியாக்களை அடிக்கடி சந்தித்தாலும் இவர் சொல்வதை வேறு மாதிரி வெட்டிஒட்டி இவருக்கு எதிராகவே மக்களிடம் பரப்பிவிடும் சில மீடியாக்கள். நடிகராக அவர் பத்திரிகைத் தொடர்பாளர்கள் மூலம் மக்களுடன் தொடர்பில் இருந்தது போன்ற செயல்பாடு அரசியலுக்கு ஒத்து வராது. இங்கே அவர் அன்றாடம் பத்திரிகையாளர்களை நேரில் சந்தித்து அவர்களது கேள்விகளுக்கு பதிலளித்தாக வேண்டும். அதனை எப்படி கையாளப் போகிறார் என்று தெரியவில்லை.

எனக்குத்தெரிந்து 1994 முதல் மதிமுகவில் பயணித்தும், 2005 முதல் தேமுதிகவில் பயணித்தும் சொந்த பணத்தை ஏராளமாக செலவழித்து தங்கள் வாழ்க்கையை தொலைத்தவர்களும், 1990- கள் முதல் ரஜினி அரசியலுக்கு வருவார் என்ற நம்பிக்கையில் ஏராளமான பணத்தை வாரிஇறைத்து அதனால் கடனாளி ஆனவர்களும் ஏராளமானோர். அந்த வகையில் தன்னை நம்பி வரும் ரசிகர்களை சொந்த வாழ்க்கையில் தோற்க விட்டுவிடக்கூடாது விஜய்.

ரஜினிகாந்த் அரசியலுக்கு வரப்போதாக 2017-இல் முதல் முறை அறிவித்தபோது, தனது ரசிகர்களிடம், 'முதலில் உங்கள் குடும்பம், தொழில், வாழ்க்கையை நல்லபடியாக பார்த்துக்கொள்ளுங்கள். அதன்பிறகு நேரமும் ஆர்வமும் இருந்தால் அரசியலுக்கு வாருங்கள்' என்று அறிவுரை வழங்கினார். அதையே நீங்களும் உங்களை வெறித்தனமாக நேசிக்கும் ரசிகர்களுக்குச் சொல்லுங்கள்.

விஜய் இதுவரை நடித்த அனைத்து திரைப்படங்களையும் ஒருங்கிணைத்துப் பார்க்கும் போது தமிழகத்திற்கே உரிய வழக்கமான மக்கள் செல்வாக்கு அவருக்குப் பல காலமாகவே தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது என்பதை ஏற்க வேண்டி இருக்கிறது.

ஜனநாயகபூர்வமான விஷயங்களில் மக்கள் என்ன விரும்புகிறார்கள் என்பது மிக முக்கியமானது. இதுவரை அவர்கள் பலமுறை ஆட்சிகளை மாற்றி அமைத்திருக்கிறார்கள். தீவிரமான முன்னணி கட்சிகள் தங்களது ஆட்சியில் எத்தனை விதமாக மக்கள் பணி செய்திருந்தாலும் மக்களின் நம்பிக்கையை பொறுத்தவரை அவர்களுக்கு மாற்றங்களும் புதிய முகங்களும் தேவைப்படுகின்றன.

எந்தத் தகுதியும் இல்லாமல் தந்தையின் தோள்களில் ஏறி வாரிசுகள் உச்சபட்சமான பதவிகளுக்கு சுலபமாக வந்துவிட முடிகிறது. இந்தியாவின் எல்லா மாநிலங்களும் இன்று வாரிசு அரசியலின் கீழ்தான் நிலைபெறுகின்றன.

ரமாற்றம் மக்களுக்குத் தேவைப்படுகிறது. அதாவது, வாரிசு அரசியலால் சலிப்பு அடைந்திருக்கும் மக்களுக்கு ஒரு மாற்று அரசியல் தேவைப்படுகிறது. நம்பிக்கையான முகம் ஒன்று தேவைப்படுகிறது. அந்த வகையில் இந்த புதிய

(7ஆம் பக்கம் பார்க்க...)

# முன் பள்ளி ஆசிரியர்களுக்கான பால்நிலை சமத்துவ செயலமர்வு




(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பால்நிலை சமத்துவம் மற்றும் உளநலன் , உளவியல் நடத்தை சார் அணுகுமுறைகள் தொடர்பான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

அமைப்பின் தலைவி திருமதி கலைவாணி தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்நாவிதன்வெளி பிரதேச செயலக உளநல ஆற்றுப்படுத்துநர் ஏ.சுதர்சன் விளக்கவுரையாற்றினார்.

இதில் அமைப்பின் இணைப்பாளர் மற்றும் கள உத்தியோகத்தர் ,திட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் முன் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# சட்டவிரோத மண் அகழ்வை நிறுத்தக்கோரி வடமராட்சி கிழக்கில் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம் - வடமராச்சி கிழக்கு அம்பன் பகுதியில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் சட்ட விரோத மணல் அகழ்வை நிறுத்துமாறு கோரி பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அம்பன் பிரதேச வைத்தியசாலை முன் ஆரம்பமான இந்தப் போராட்டப் பேரணி மணல் அகழ்வு இடம்பெறும் இடத்தை நோக்கி சென்றது.

இதில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டு மணல் அகழ்வை நிறுத்துமாறு கோஷமிட்டனர்.

2010ஆம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் சட்டத்துக்கு முரணாக மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகிறது.(05)



# தெஹிவளை ஆஞ்சநேயர் குடமுழுக்குப் பெருவிழா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு ,தெஹிவளை சிறி ஆஞ்சநேயர் ஆலயத்தில் 'சிறி சிவன்' நூதன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் தைத்திங்கள் 28 ஆம் நாள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.55 மணியிலிருந்து 11.02 வரை ஸ்ரீசிவன் நூதன பிரதிஷ்ட மஹா கும்பாபிஷேகம் (குட முழுக்கு) இடம்பெறவுள்ளது.

தைத்திங்கள் 27 ஆம் நாள் நேற்று (சனிக்கிழமை) எண்ணெய்க்காப்பு (தைலஸ்நானம்) சாத்தும் நிகழ்வு காலை 9.00 மணியிலிருந்து நடைபெற்றது.

ஸ்ரீஜயவீர பஞ்சமுக ஆஞ்சிநேயர் சுவாமிஜியின் குருவருள் கைகூடியுள்ளதால் அடியார்கள் அனைவரும் ஸ்ரீசிவனின் கும்பாபிஷேகத்தை தரிசித்து உய்வடையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (05)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சம்மாந்துறையில் பால்மா விநியோகம்

(தில்சாத் பர்வீஸ்)

அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட தொழில் பாதிப்பால் மறைமுகமாக பாதிக்கப்பட்ட வீரமுனை 01, 02, 03 மற்றும் 04 ஆகிய கிராமங்களில் வசிக்கும் 02 வயதுக்குப்பட்ட குழந்தைகளையுடைய குடும்பங்களுக்கு பால்மா பொதிகள் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஹனீபா தலைமையில் வீரமுனை ஆர். கே. எம். பாடசாலையில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்குரிய அனுசரணையை ஜிஏஎவ்எஸ்கியு நிறுவனம் வழங்கியதோடு சென்னல் கிராமம் மற்றும் கல்லரிச்சல் கிராமம் போன்றவற்றிற்கும் சுமார் 350 தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கும் இவ்வாறான பொதிகள் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிகழ்வில் ஜிஏஎவ்எஸ்கியு நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் காமில் இம்டாட், சம்மாந்துறைக்கு பொறுப்பான தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் அஸாறுடீன், பாடசாலையின் அதிபர் மற்றும் கிராம மட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் சொத்துத்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அசோக ஜெயவர்த்தன உயிரிழந்த செய்தி தாங்கமுடியாத இழப்பை ஏற்படுத்திகிறது

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க தலைவர் தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

மாகாண முதலமைச்சராகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த அமரர் அசோக ஜெயவர்த்தன மரணித்த செய்தி தாங்க முடியாத இழப்பை ஏற்படுத தியுள்ளது.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்கம் பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

அமரர் அசோக ஜெயவர்த்தனவின் ஞாபகார்த்த அனுதாபம் தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு லோகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு உரை யாற்றும்போது -

அசோக ஜயவர்த்தன, மனித குல மாணிக்கமாகத்தான் நான் பார்க்கிறேன். 1990 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த கொடிய யுத்தத்தால் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக கொழும்பு மாநகரத்தின் அகதிகள் முகாம்களில் இருந்து, அகதி அந்தஸ்து கோரி வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய சூழலின்போது 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திக திக்குப் பின்னர் ஒரு யுத்த சூழ்நிலையில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் பதிவேட்டு அறையில் மேலதிக பதிவாளர் நாயகமாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அசோக ஜயவர்த்தன, தமிழ் பேசும் மக்களுக்கு ஆற்றிய சேவை எங்களால் மறக்க முடியாது. அவருடன் நான் கடமையாற்றிய வேளையில் அவர் என்னை ஒரு சகோதரனாகத்தான் கருதினாரே தவிர ஓர் உத்தியோகத்தராக என்னைக் கருத வில்லை. நான் தொழிலுக்கு சென்ற வேளை என்னை அரவணைத்து நான் கொழும்புக்கு அகதியாக சென்ற அங்கு வேலைக்கு சென்றபோது என்னை ஒரு சகோதரனாகவே அவர் அரவணைத்து செயற்பட்டார். இதனை என்னால் வாழ்க்கையில் மறக்க முடியாது. தமிழோ முஸ்லிமோ யாராக இருந்தாலும் அன்பாகப் பழகி ஆதரவாக அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய மிக சிறப்பான பண்புள்ள ஒருவராக மனிதருள் மாணிக்க மாகவே இவர் காணப்பட்டார் என்று கூறலாம்.




இவ்வாறு அவர் ஒரு நேர்மையான அதிகாரி என்று கூறலாம். பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற ஓர் அதிகாரி அரசியலில் ஈடுபடுவதற்கு நேரமில்லை ஏனென்றால் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் வேலை செய்கின்ற ஒருவர் 24 மணித்தியாலமும் சேவை செய்ய வேண்டிய தேவை இருந்தது. ஆனாலும் அமரர் அசோக ஜயவர்த்தன அவர்கள் அவருடைய திறமையின் வெளிப்பாட்டின் காரணமாக பதிவாளர் நாயகம் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் நாயகமாக இருந்து கொண்டு அரசியலில் ஈடுபட்டது இலங்கை அரசியலில் ஒரு வரலாறாகும்.

இவரது இழப்பில் துயருற்றிருக்கும் அனைவருக்கும் மற்றும் குறிப்பாக அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் கூறினார்.

(05)

## வெற்றுக் கொள்கலன்கள் சேகரிக்கும் பணி வெற்றி

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவிற்குப்பட்ட கோட்டைக்கல லாறு பிரதேசங்களில் காணப்படும் வெற்றுக் கொள்கலன்களை அகற்றும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கோட்டைக்கல்லாறு பொதுவிளையாட்டு மைதானம் மற்றும் கோட்டைக்கல்லாறு கிராமத்தின் நீரேந்தும் பகுதிகளை அண்டிய பிரதேசங்கள் என்பன பிரதேச செயலக பிரிவிற்குப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களின் பங்களிப்புடன் சுத்தம் செய்யப்பட்டது.

பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வு, கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர், களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் களுதாவளை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பங்கேற்றப்புடன் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



## இமயமலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களைச் சேர்ந்த பௌத்த, இந்து, முஸ்லிம், மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்கள் சிவில் சமூக பிரதிநிதிகள் உட்பட 30இற்கும் மேற்பட்டவர்கள்பங்கேற்றிருந்தனர்.

சிறந்த இலங்கைக்கான சங்கத்திலிருந்து, மாதம்பகம அசாஜி திஸ்ஸ தேரர், பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், கித்தலாகம ஹேமசார நாயக்க தேரர் மற்றும் சியம்பலகஸ்வெள விமலசார தேரர் மற்றும் உலகத் தமிழர் பேரவையின் சார்பில் அமெரிக்காவைச் சேர்ந்த எலியாஸ் ஜெயராஜா ஆகியோர் இந்தநிகழ்வில் கலந்துகொண்டார்.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான சங்கத்தின் சாஜூபில் விசாகா தர்மதாச மற்றும் அங்கத்தவர்களும், பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், நாகர்கோட் உரையாடலின் தொடர்ச்சியாக நடைபெற்ற கலந்துரையாடல் இருந்தது. பெரும்பாலான பங்கேற்பாளர்களிடமிருந்து இமயமலை பிரகடனம் பற்றி மிகவும் சாதகமான கருத்துக்களைக் கேட்டேன் என்று எலியாஸ் ஜெயராஜா தெரிவித்தார்.

இதேவேளை, தேசிய உரையாடலில் மாவட்டம் தோறும் 5 சர்வமத தலைவர்களும் ஒரு சிவில் சமூக உறுப்பினருமாக மாவட்டத்திற்கு தலா 6 பேர் பிரதிநிதித்துவப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடுகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுதினம்நாடுதிரும்பியஅவர்கட்டுநாயக்க விமானநிலையத்தில்செய்தியாளர்களிடம்பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

முதலில் மக்கள் ஆணையுள்ள தலைவர் ஒருவர் நாட்டுக்கு பதவியேற்கவேண்டும். மக்கள் ஆணையுள்ள தலைவருடன் நாம் பேச்சு நடத்துவதற்குத் தயாராகவேஉள்ளோம். அவ்வாறில்லாது மக்கள் நிராகரித்து நாடாளுமன்றத்திற்குக்கூடத் தற்போது வரமுடியாதிருக்கும்ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் ஆட்சியே தற்போதுள்ளது.

உள்நாட்டில் பொருளாதார, அரசியல் நிலைமைகள் மிக மோசமாக உள்ளன என்பது இரகசியமான விடயமல்ல. இந்தியாவுக்கும் அந்த விடயங்கள் நன்றாகவே தெரியும்.

அதேபோன்று ரணில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சிக்கின்றார் என்ற விடயமும் இரகசியமானது அல்ல. ஆகவே ஒக்டோபர் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தல் ஒரு திருப்புமுனையாக அமையும்.

எம்மைப் பொறுத்தவரையில் 76 வருட அரசியல் கலாசாரம் மாற்றியமைக்கப்படவேண்டும். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். மக்கள் மத்தியில் உள்ள எழுச்சியானது அதில் பிரதிபலிக்கும். அந்த மக்கள் எழுச்சிக்கு நாம் தலைமைத்துவத்தினை வழங்குவதோடு நாட்டின் நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும்.

அந்தப் பரிமாற்றத்துக்கு சர்வதேச உறவுகள் அவசியமாகும். அதற்காகவே நாம் சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை படிப்படியாக முன்னெடுத்து வருகின்றோம்.

மேலும் இந்தியாவுக்குச் சென்ற முதலாவது அரசியல் கட்சி நாமல்ல. அவ்வாறு யாராவது சிந்திப்பார்களாக இருந்தால் அவர்களையிட்டு நான் கவலை அடைகின்றேன். அவர்கள் பாவம்.

எமது இந்தியப் பயணம் குறித்து மிகத்தெளிவாக விடயங்களை முன்வைக்கும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நாளையதினம் (இன்று) நடத்தவுள்ளோம் என்றார்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# கம்பஹா மாவட்ட திஹாரிய உலமாக்களின் சேவை முஸ்லிம் சமூகத்திற்கு நல்லதோர் முன்னுதாரணம்

## கலாநிதி ஹஸன் மௌலானா தெரிவிப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஸ்லிம்கள் பிளவுபடுவதைத் தடுக்குமுகமாக முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு கம்பஹா மாவட்ட திஹாரியைச் சேர்ந்த அஹ்லுஸ் ஸ/ன்னத்-வல்-ஜமாஅத் தரீக்கா, தப்லீக் ஜமாஅத், ஜமாஅதே இஸ்லாமி மற்றும் தௌஹீத் ஜமாஅத் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 150 இற்கும் மேற்பட்ட உலமாக்கள் ஒன்றிணைந்து வேற்றுமையில் ஒற்றுமையுடன் 'துரறு உலமா திஹாரிய' என்ற அமைப்பை உருவாக்கி ஒற்றுமையென்ற ஒரே கொடியின் கீழ் சகோதரத்துவத்துடன் இணைந்து செயற்படுகின்றமை முஸ்லிம் சமூகத்திற்கு நல்லதோர் முன்னுதாரணமாகத் திகழ்கின்றது என இஸ்லாமிய ஒற்றுமை பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவரான அல்-ஹாஜ் அஸ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மனமகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அல்-ஆலிம் முஹம்மத் பர்தி (ஹஸனி,அரூஸி)யுடைய தந்தை அல்-ஹாஜ் முஹம்மத் நாஸிர் கடந்த சனிக்கிழமை காலம் சென்றதை முன்னிட்டு அவருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக திஹாரியிலுள்ள அவரது இல்லத்துக்கு இஸ்லாமிய ஐக்கிய பேரவை ஸ்தாபகர்கள் சார்பில் விஜயம் செய்த வேளையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கிடையே ஏற்படும் பிளவுகளை இல்லாதொழித்து முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு துரறு உலமா திஹாரிய அமைப்பினர் வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்த நல்ல வேலைத்திட்டத்தை இலங்கையில் வாழும் சகல முஸ்லிம்களும் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்வதுடன், முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துவதற்கான முயற்சிகளை முஸ்லிம் சமூகத்திலுள்ள உலமாக்கள், புத்திஜீவிகள் மற்றும் சமூக சேவைகள் அமைப்புகள் முன்வந்து ஒன்றிணைந்து மும்முரமாகச் செயற்படுகின்றமை காலத்தின் தேவையாகும் என கலாநிதி ஹஸன் மௌலானா மேலும் தெரிவித்தார்.

அல்-ஆலிம் முஹம்மத் பர்தி (ஹஸனி,அரூஸி) அவர்கள், துரறு உலமா திஹாரிய அமைப்பின் முக்கியமான ஒருவராகவும் அஹ்லுஸ் ஸ/ன்னத்-வல்-ஜமாஅத் தரீக்காவை சேர்ந்த மூத்த உலமாக்களில் ஒருவராகவும் முஸ்லிம் சமூகத்திற்கு செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

துரறு உலமா திஹாரிய அமைப்பு கடந்த மூன்று வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு பல சமூக பணிகளை ஒற்றுமையுடன் செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த விஜயத்தின் போது இஸ்லாமிய ஐக்கியப் பேரவையின் நிர்வாக உத்தியோகத்தர் பியாஸ் முஹம்மத், துரறு உலமா திஹாரிய அமைப்பின் முக்கியமான மூத்த உலமாக்கள் மற்றும் அல்-ஆலிம் பர்தி ஹஸனி அவர்களின் சகோதரர்கள், குடும்ப அங்கத்தவர்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# விஜய் சாதிப்பாரா?........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

கட்சி திராவிடஆட்சிகளின்அதிருப்தியாளர்களை ஒருங்கிணைக்கும் என்கிற முறையிலும்கூட வரவேற்பு பெறக்கூடும்.

ரமிக நுட்பமான அரசியல் பார்வையை வைத்து பார்த்தால் இதற்கான பின்னணிகள் பல இருக்கின்றன. ஒருபுறம் திராவிட அரசியலின் ஏகபோகமும், மறுபுறம் இடதுசாரி- வலதுசாரி கட்சிகளின் கருத்தியல் திணிப்புகளும் மக்களை சோர்வடையச் செய்திருக்கின்றன.

நடிகர் விஜய் இனி திரைப்படங்களில் நடிக்க போவதில்லை என்று சொல்லியிருக்கிறார். 'பான் இந்தியா' திரைப்படங்களும், 'டான்', 'கேங்ஸ்டர்' படங்களும் என சினிமா உலகம் மாபெரும் அலுப்பாக தொழில்நுட்ப கலைகளை வைத்து ஏமாற்றும் பிம்ப வன்முறையாக மாறிக்கொண்டிருக்கும் வேளையில் மிகச் சரியான முறையில் அதை விட்டு, தான் வெளியே வருவதாக அறிவித்து இருக்கிறார் விஜய். மக்களின் முன்பாக மக்களை போல நிற்க வேண்டும். சினிமா ஒரு தொழில் மட்டும்தான். ஆனால், மக்கள் ஒருவர் மீது வைக்கக்கூடிய நம்பிக்கை மிக மிக முக்கியம். அதற்கான கைம்மாறு என்ன என்கிற கேள்வியோடு சினிமாவை விட்டு வெளியேறி அரசியல் தளத்திற்கு செல்வது என்பது அவர் மனதிற்கு சரியானதாகப்பட்டிருக்கலாம். இல்லையெனில் திராவிட பிம்ப அரசியலில் சமீபகாலமாக உருவாக்கி வரும் வாரிசு மற்றும் கதாநாயக அரசியல் முன்னெடுப்பை எதர்கொள்வதற்காகவும் அவர் சினிமாவை விட்டு வெளியேறி இருக்கலாம். தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை அதன் கதாநாயக அந்தஸ்தில் வளர்ந்தவர்கள் பொதுவெளி அரசியலில் தங்களுக்கு ஏதேனும் இடர் ஏற்படும் போது தங்களுக்குரிய மக்கள் செல்வாக்கை வைத்துக்கொண்டு ஏன் நாமே ஒரு அரசியல் கட்சியைத் தொடங்கக்கூடாது என்று நினைப்பது கடந்த 50 ஆண்டுகளில் தொடர்கதை ஆகிவருகிறது.

இந்தப் பார்வை நடிகர் விஜய்யின் புதிய கட்சிக்குப் பொருந்துமா என்பது சிந்திக்க வேண்டிது. மற்றபடி ஆளுங்கட்சிக்கு ஆதரவான வாக்குகளைப் பிரிக்கத்தான் விஜய் புதிய கட்சி தொடங்கியுள்ளார் என்றும், இவர் எப்படி தமிழ்நாட்டிற்கு முதலமைச்சர் ஆக முடியும் என்றும் பல ஊகங்களையும் சந்தேகங்களையும் சிலர் எழுப்புகிறார்கள். பணம், பதவி, ஆட்சி முறை என்று மாறி வருகிற இன்றைய நவீன சூழலில் இவற்றை எல்லாம் எதிர்கொண்டு விஜய் அரசியலில் முன்னிடத்தைப் பெறுவாரா?

ரவருகிற நாடாளுமன்றத் தேர்தலில் இவரது பிரசாரம் எப்படி இருக்கும், யாருக்கு ஆதரவாக இருக்கும் என்றெல்லாம் கேள்விகள் தொடர்கின்றன. விவரம் அறிந்தவர்கள், ரஜினியின் ரசிகர் மன்றங்கள் போல் அல்லாமல், விஜய் மன்றங்கள் தமிழ்நாடு எங்கும் பல்வேறு வகையில் வலுவாகக் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறுகிறார்கள். அரசியலில் நுழையும் நடிகர் விஜய், பலமான அஸ்திவாரங்களை சிறிதளவில் நடுக்கமுறச் செய்யும் அதர்வுகளை மட்டும் உண்டாக்குவாரா, அல்லது பணபலமும், ஜாதியமும், வாரிசு அரசியலும் கோலோச்சும் தமிழக அரசியலைத் தடம்புரளச் செய்து புதிய வெற்றிப் பாதையை அமைக்கப்போகிறாரா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

# 'கொத்துவேலி' கவிதை நூல் வெளியீட்டு விழா

(அபு அலா)

பெரியநீலாவணை பைந்தமிழ்ச் சுடர் சிவபாதசுந்தரம் சுதாகரன் எழுதிய 'கொத்துவேலி' கவிதை நூல் வெளியீட்டு விழா திருமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், எழுத்தாளரும் மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் மாகாணப் பணிப்பாளர்கள், கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக முதல்வர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

எண்ணம்போல் வாழ்க்கை இலக்கியமன்றத்தின் ஒருங்கமைப்பில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவர் எழுத்தாளர் கனக. தீபகாந்தனும், 'கொத்துவேலி' நூலாசிரியர் பற்றிய அறிமுகவுரை, நூல்பற்றிய சிறப்பு நயவுரையை சமூகசேவைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா.கி.இளங்குமுதன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா.இரத்தினசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிவபாதசுந்தரம் சுதாகரனின் 'நீலையூர் சுதா' எனும் புனைபெயருடன் கிராமிய மணங்கமழும் வகையில் நாட்டுப்புற வாழ்கை, நிகழ்கால நாட்டு நடப்புக்கள் என அனைவரும் ரசித்து வியக்கும் வகையிலான உயிரோட்டமுள்ள கவிதைப் படைப்புக்கள் கொண்ட இந்நூல் 'கொத்துவேலி' எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.

திருமதி லலிதா சுதாகரனால் 'கிடுகு வீடு' எனும் தலைப்பிலும் கவிதைத் தொகுப்பொன்றை வெளியிட்டு பெருவரவேற்பைப் பெற்ற 'நீலையூர் சுதா', பல ஆலய இறுவட்டுகளுக்காக பாடல்களையும் எழுதியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் வடக்கு எல்லையின் விவசாயக் கிராமமான பெரியநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட 'கொத்துவேலி' நூலாசிரியரான பைந்தமிழ் சுடர் சுதாகரன்

கிழக்கு மாகாண மீன்பிடி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# சமாதானம் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் செயலமர்வு

## சீனக்குடா இளைஞர்களுக்காக

(ஹஸ்பர் ஏ.எச்)

இளைஞர்களிடையே சமாதானம் , மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தும் நோக்கிலான செயலமர்வு எழுத்தாணி பவுண்டேஷன் நிறுவனத்தால் கடந்த 5 ஆம் திகதி திருகோணமலையில் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

எழுத்தாணி பவுண்டேஷன் அமைப்பின் பணிப்பாளர் வடமலை ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வின் வளவாளர்களாக திருகோணமலை மாவட்டத்தில் வளர்ந்து வரும் பயிற்றப்பட்ட இளம் வளவாளர்களாக சுதர்சன் ,உதயராஜ் தருணிக்கா, ஹர்ஷ ஆகியோரால் நடத்தப்பட்டது.

சீனக்குடா மற்றும் அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த மூவின இளைஞர்கள், மதத் தலைவர்கள் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் பெண்கள் அமைப்புக்கள், சமாதான நீதிவான்கள் இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வின் போது அடிப்படை மனித உரிமைகள் மற்றும் நமது அடையாளங்களைப் பாதுகாத்தல் , வன்முறை அற்ற தொடர்பாடல் திறன் போன்ற தலைப்புகளில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கௌசல்யன் மற்றும் சந்திரநேரு நினைவேந்தல் நிகழ்வு யாழில்

கௌசல்யன், சந்திரநேரு ஆகியோரின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழில் இடம்பெற்றது.

2005 சமாதான காலத்தில் வெலிக்கந்தவில் படுகொலை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் தளபதி கௌசல்யன் உள்ளிட்ட போராளிகள் மற்றும் முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு ஆகியோரின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் கடந்த வியாழக்கிழமை மாலை 05 மணியளவில் கொக்குவிலில் இடம்பெற்றது.

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ப.தர்சானந்த், வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான அ.ஜோன் ஜிப்பிறிக்கோ, திருமதி சி. மரியறோசறி, ரமணன் மற்றும் வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபை உறுப்பினரான திருமதி வதனி காந்தராசா மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டு தமது அஞ்சலியை செலுத்தினர். நிகழ்வில் அகவணக்கம், சுடரேற்றல், மலரஞ்சலி, புகழுரை என்பன இடம்பெற்றன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வான்படையின் 73 ஆவது ஆண்டில் வடக்கில் உதைபந்தாட்ட போட்டி









இலங்கை விமானப்படையின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாணத்தில் உள்ள உதைபந்தாட்ட சங்கங்களுக்கிடையிலான உதைபந்தாப்பட்ட சுற்றுப்போட்டி நேற்று வைபவ ரீதியாக ஆரம்பமானது.

இலங்கை விமானப்படையின் 73 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, இலங்கை விமாப்படைத் தளபதி எயா மார்சல் உதயநிதி ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைவாக 'கொமான்டோஸ் கப்' வெற்றிக்கிண்ண நட்புறவு போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

11 அணிகள் மோதிக்கொள்ளும் குறித்த போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நிறைவடையவுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் இரணைமடு விமானப்படை கட்டளை அதிகாரி குருப் கப்டன் சுலோசன மறப்பன கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார். தனது ஆரம்ப உரையில் இரணைமடு விமானப்படை கட்டளை அதிகாரி குருப் கப்டன் சுலோசன மறப்பன குறிப்பிடுகையில் -

இலங்கை விமானப்படையின் 73 ஆம் ஆண்டு நிறைவையொட்டி சமூக பாதுகாப்பினை இலக்காக கொண்டு இந்த போட்டியை நடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த போட்டியின் ஊடாக நட்புறவை வளர்ப்பதுடன், விமானப்படைக்கும் உங்களுக்கும் இடையில் நல்ல உறவைக் கட்டியெழுப்புவதுமே எமது இலக்காகும் எனவும் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து விளையாட்டு வீரர்கள் அறிமுகம் இடப்பெற்றதுடன், குழுப்படம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலாவது போட்டி ஆரம்பமானது. குறித்த போட்டியில் கிளிநொச்சி வவுனியா அணிகள் மோதின. முதலாவது கோலை கிளிநொச்சி லீக் அணி பெற்றது. (05 -113)

## நாட்டின் சுதந்திரம், விடிவுக்கு முஸ்லிம்கள் ஆற்றிய சேவைகள் மறக்கப்படவேகூடாது

### ஐ. ஏ. கலிலூர் ரஹ்மான் வலியுறுத்து

அந்நியர்களிடம் இருந்து சுதந்திரத்தைப் பெறவும், 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முஸ்லிம்கள் நாட்டுக்கு மேற்கொண்ட தியாகங்கள் மறக்கப்படக் கூடாது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ. ஏ. கலிலூர் ரஹ்மான் தெரிவித்தார். இது தொடர்பாக கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தவை வருமாறு -

ஆங்கிலேயர்களிடம் இருந்து நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேச பக்தர்களான முஸ்லிம்கள் மிக காத்திரமான பங்களிப்புகளை வழங்கி உள்ளனர். மூவினங்களும் சேர்ந்து போராடித்தான் தாய்நாட்டுக்கு சுதந்திரம் பெறப்பட்டது.

அன்றைய ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தால் துரோகிகள் என்று இவர்கள் முத்திரை குத்தப்பட்டனர். ஆனால் எமது நாடும், மக்களும் இவர்களை சுதந்திரப் போராட்ட வீரர்களாக கொண்டாட வேண்டியது தலையாய கடப்பாடு, நன்றி கடனும் ஆகும். ஊவா வெல்லஸ்ஸ கிளர்ச்சியில் பங்கேற்ற சிங்கள புத்திரர்களை மாத்திரம்தான் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது சுதந்திர போராட்ட வீரர்களாக வர்த்தமானியில் பிரகடனம் செய்து கபட நாடகம் நடத்தினார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்த முஸ்லிம் தலைவர்கள் இதற்கெதிராக வாய் திறக்கவே இல்லை. அவர்கள் கண் இருந்தும் குருடர்களாக, வாய் இருந்தும் ஊமைகளாக, காதிருந்தும் செவிடர்களாக நடந்து கொண்டிருந்தனர்.

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவும் முஸ்லிம்கள் ஏராளமான தியாகங்களை மேற்கொண்டனர். அவையும் மறக்கடிக்கப்பட்டு, மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சஹ்ரான் கும்பலால் மாறாத களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. - என்றார். (05)

## அம்பாறை மாவட்டத்தில் விபத்து நால்வர் காயம்

(கே எ ஹமீட்)

அம்பாறை மாவட்டம் அம்பாறை- சியம்பலாண்டுவ பிரதான வீதியில் தமண பொலிஸ் நியாயாதிக்க பகுதியிலுள்ள குருட்டு கந்த எனும் பிரதேசத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் காயமடைந்து தமண வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். விபத்தில் சிக்கியவர்கள் கடந்த 03.02.2024 ஆம் திகதி திருணமான அட்டாளைச்சேனயைச் சேர்ந்த மணமகனையும், திக்வலலையைச் சேர்ந்த தமது மகளையும் பார்த்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளவென திக்வல்லையிலிருந்து வருகை தந்த உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலதிக விசாரணைகளை தமண பொலிஸ் மேற்கொண்டு வருகிறார்கள். (05)

## திருமலையில் கப்பல் கட்டும் தளம்: யோசனை முன்வைத்தது இந்தியா

(நூருல் ஹுதா உமர்)

இந்திய பாதுகாப்பு அமைச்சின் இணைச் செயலாளர் பிரபாகர் மற்றும் அவரது கடற்படைக் குழுவினர் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக வருகைதந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

இச்சந்திப்பில் திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டது.

திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துவதன் ஊடாக வங்காள விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு அவசர நிலையின் போது விரைவான சேவைகளை வழங்க முடியும் என இந்திய இந்திய பாதுகாப்பு அமைச்சின் குழுவினர் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர். (05)

## வாய் புற்று நோய் ஸ்கிரீனிங் இலவச நடமாடும் சேவை



(அபு அலா)



உலக பல்வலி தினத்தையொட்டி 'வெற்றிலை, புகை பிடித்தலைத் தவிர்த்து வாய்ப்புற்று நோயினைத் தடுப்போம் எனும் தொனிப் பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குற்பட்ட ஆலையடிவேம்பு கண்ணகிபுர கிராமத்தில் வசித்து வருகின்ற மக்களின் வாய்வழி புற்றுநோய் ஓ.பி.எம்.டி ஸ்கிரீனிங் திட்ட நடமாடும் இலவச பல் வைத்திய சேவையுடன் விழிப்புணர்வு நிகழ்வும் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகிலா இஸ்ஸதீனின் அறிவுரை மற்றும் ஆலோசனைக்கமைவாக, கல்முனை பிராந்திய பல் வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.சறூகின் தலைமையில் கீழ், ஆலையடிவேம்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி ஏ.பிரசாந்தினி மற்றும் ஊழியர்கள் உள்ளிட்ட குழுவினர் இச்சேவையை முன்னெடுத்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குப்பட்ட கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் அவர்களின் ஆரோககிய வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வாறான இலவச மருத்துவ நடமாடும் சேவைகளையும், பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளை கடந்த பல வருடங்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்னெடுத்துச் வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்கு பல்கலையில் பட்டமளிப்பு தொடக்கம்











(எஸ்.அஷ்ரப்கான்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று (சனிக்கிழமை) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் விழா மண்டபத்தில் ஆரம்பமானது.

நேற்றைய இந்நிகழ்வுகள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் நெறிப்படுத்தலிலும் பல்கலைக்கழக வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் தலைமையிலும் இடம்பெற்றன.

பட்டமளிப்பு விழாவின் முதல் அமர்வின் விசேட பேச்சாளராக அமெரிக்க-இலங்கை ஃபுல்பிரைட் ஆணைக்குழுவின் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பெட்ரிக் மெக்னமாரா கலந்து கொண்டு உரையாற்றினார்.

முதலாம் நாளின் முதலாவது அமர்வில் கலை கலாசார பீடத்தைச் சேர்ந்த 342 பட்டதாரிகளும் இரண்டாவது அமர்வில் இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழி பீடத்தைச் சேர்ந்த 355 பட்டதாரிகளும் மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 430 பட்டதாரிகளும் பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

நேற்றைய தினத்தில் கலை கலாசார பீடத்திலிருந்து 2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் அரசியல் மற்றும் சமாதான கற்கைதுறையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம். எல்.ஏ. காதர் விருதை முகம்மது அமீர் மர்யம் பெற்றுக்கொண்டார். அத்துடன் 2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் தமிழ் துறையில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருதை முஹம்மட் அலி றீஷா நூர் சுவீகரித்தார்.

2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் ஹிந்து கலாசார துறையில் சிறந்த மாணவருக்கான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஞாபகார்த்த விருதை வனிதா உதயகுமார் பெற்றுக்கொண்டார்.

இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் சார்பில் 2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் இஸ்லாமிய சிந்தனைகள் மற்றும் நாகரிகம் என்ற துறையில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி ஞாபகார்த்த விருது நூறுல் ஸிபா ஜாபீறுக்கு வழங்கப்பட்டது.

2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் இஸ்லாமிய வங்கி மற்றும் நிதி துறையில் சிறந்த மாணவருக்கான இஸ்மாயில் டீன் மரிக்கார் விருது செயினுல் ஆப்தீன் சாஜித் பெற்றுக்கொண்டார். மூன்றாவது அமர்வில் பிரயோக விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்பவியல் பீட மாணர்களுக்கான பட்டங்கள் வழங்கப்பட்டன.

விழாவின் மூன்றாவது அமர்வில் விஷேட பேச்சாளராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி உடவத்த கலந்து கொண்டு உரையாற்றினார்.

குறித்த அமர்வின்போது தொழில்நுட்பவியல் பீடத்தின் சிபார்சின் கீழ் கலாநிதி திலகரத்ன ஆராச்சிகே பியசிறி கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பிரயோக விஞ்ஞான பீடத்திலிருந்து 2017ஃ2018 ஆம் கல்வி ஆண்டில் விஞ்ஞானத்தில் சிறந்த மாணவருக்கான கலாநிதி எம். எச்.எம். அஷ்ரப் ஞாபகார்த்த விருதை டினூபமா சமதி ஹேவாகே பெற்றுக்கொண்டார்.

2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் இரசாயன துறையில் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் சுல்தான் பாவா ஞாபகார்த்த விருது வெடநாயக்க பிலிப்புல்லைய உமேஷா சுபுன்சாரி விக்கிரமரத்னவுக்கு வழங்கப்பட்டது.

பொறியியல் பீடத்தில் 2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் பொறியியல் பீடத்தில் சிறந்த மாணவருக்கான விருதை முகம்மது நுஷான் பாத்திமா நிகப்லா சுவீகரித்துக்கொண்டார். 2016-2017 ஆம் கல்வி ஆண்டில் சிவில் பொறியியல் துறையில் சிறந்த மாணவருக்கான விருது முகம்மது நுஷான் பாத்திமா நிகப்லாவுக்கே கிடைத்தது.

2016ஃ2017 ஆம் கல்வி ஆண்டில் எலக்ரிகல் அண்ட் எலக்ட்ரோனிக் பொறியியல் துறையில் சிறந்த மாணவருக்கான விருது திசாநாயக்க முதியன்செலாகே சத்துமினி சாரிக்க திசாநாயக பெற்றுக்கொண்டார்.

2016-2017 ஆம் கல்வி ஆண்டில் மெகானிகல் பொறியியல் துறையில் சிறந்த மாணவருக்கான விருது ஷியாட் முபீஸ் சாஹிபுக்கு வழங்கப்பட்டது. பட்டமளிப்பு விழாவின் நேரடியாக ஒலி ஒளிபரப்பு பல்கலைக்கழக ஊடகப்பிரிவின் நேரடி கண்காணிப்பில் இதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட இணையத்தள பக்கத்தினூடாக ஒலி ஒளிபரப்புச் செய்யப்பட்டது விசேட அம்சமாகும். இன்று (ஞாயிற்றுக்கிழமை) நான்காவது, ஐந்தாவது மற்றும் ஆறாவது அமர்வுகளில் வர்த்தக முகாமைத்துவ பீடம் மற்றும் வெளிவாரி பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# 13 வயது சிறுமியின் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சந்தேகநபர் கைது

*தாயின் கை, கால்களை கட்டி வைத்து 13 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தாயின் கள்ளக்காதலன் எனக் கூறப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்டவர் குருணாகல் பிரதேசத்தை சேர்ந்த 34 வயதுடைய நபராவார்.*

*இவர் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயுடன் தகாத உறவில் ஈடுபட்டு வந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சம்பவத்தின் போது சந்தேக நபர் மது போதையில் வீட்டுக்கு வந்த நிலையில் சிறுமியின் தாயின் கை, கால்களைக் கட்டி அவரை சமையல் அறையில் தடுத்து வைத்து குறித்த சிறுமியை அறையொன்றுக்குள் அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.*

*பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் இது தொடர்பில் மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.*

*இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)*

# குரலற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளருக்குப் பிடியாணை

குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகனுக்கு யாழ்ப்பாண நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

இது குறித்து மேலும் தெரியவருகையில் -

கடந்த வருடம் இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். இதன் போது அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அந்த போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக இவ்வாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இது குறித்து மு.கோமகன் தெரிவிக்கையில் -

எனக்கு வழக்கிற்கு வருமாறு இதுவரை எந்தவிதமான அழைப்பாணையும் வழங்கப்படவில்லை. ஆனால் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும், வழக்கின்போது எனது பெயர் அழைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் எனக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. எனவே நான் சட்டத்தரணியூடாக மன்றில் ஆஜராகவுள்ளேன். - என்றார். (05)

# பன்னிபிட்டியவில் வீடொன்றில் தீ

பன்னிபிட்டிய - பெலவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் திடீரென தீ பரவியுள்ளது. இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் 2 தீயணைப்பு வாகனங்களுடன் தீயணைப்புப் படையினர் தீ பரவலை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியப் பாதுகாப்பு அமைச்சுக் குழுவினர் கிழக்கு ஆளுநரைச் சந்தித்து கலந்தாய்வு







(நூருல் ஹுதா உமர்)

இந்திய பாதுகாப்பு அமைச்சின் இணைச் செயலாளர் பிரபாகர் மற்றும் அவரது கடற்படைக் குழுவினர் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக வருகைதந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் கட்டும் தளம் ஒன்றை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டது.


திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துவதன் ஊடாக வங்காள விரிகுடாவில் பயணிக்கும் கப்பல்களுக்கு அவசர நிலையின் போது விரைவான சேவைகளை வழங்க முடியும் என இந்திய பாதுகாப்பு அமைச்சின் குழுவினர் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர்.(05)


# இந்தியாவின் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் - நாமல் சந்திப்பு











*இந்தியாவின் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.*

*நாமல் ராஜபக்ஷ அயோத்தி ராமர் கோவில் பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வதற்காக இரண்டு நாள் தனிப்பட்ட பயணமாக இந்தியாவிற்கு சென்றுள்ளார்.*

*(05)*

## தனியார் களஞ்சியசாலையில் பிலியந்தலையில் தீ விபத்து

பிலியந்தலை பலன்வத்த பிரதேசத்தில் உள்ள தனியார் களஞ்சியசாலையொன்று தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் ஏற்பட்ட தீயால் தொலைபேசி நிறுவனம் ஒன்றின் முக்கிய உபகரணங்கள் வைக்கப்பட்டிருந்த வளாகத்தில் தீ பரவியுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை அணைக்க கோட்டை, தெஹிவளை மற்றும் கொழும்பு மாநகரசபையில் இருந்து சுமார் பத்து தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.02.2024இல் வெளியிடப்பெற்றது.